**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2022 |
| Name | : Jagadeeshkumar |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.08.2024

**எதிரிகள் 1 முதல் 7 ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ருத்திரபாளையத்தில் வசித்து டிரைவராக வேலை செய்கிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2 வது எதிரி தமிழ்ச்செல்வன் பைக்கில் போகும் என்னை மோதுவது போல் வந்ததால் நான் அது குறித்து கேட்டு எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது. அந்த அடிப்படையில் நான் எதிரிகள் மீது இருந்த முன் விரோதம் காரணமாக நான் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது எதிரிகளை தொடர்புபடுத்தி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி – நான் போலீஸ் விசாரணையிலும், புகாரிலும் கடந்த 13.12.2021ம் தேதி இரவு 22.00 மணிக்கு குப்பம்பாளையம் – ஆண்டிபட்டி ரோடு கார்வேம்பு மட்டை மில் அருகில் வைத்து எதிரிகள் மணிக்குமார், தமிழ்ச்செல்வன், கார்த்தி, பூபாலகிருஷ்ணன், மணிகண்டன், மதன் குமார், பார்த்திப ராஜ் ஆகியோர்கள் சட்டவிரோமாக ஒன்று கூடி கலகம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணி கார்வேம்பு மட்டை மில் வளாகத்தில் அத்து மீறி உள்ளே நுழைந்து மேற்படி 7 நபர்களும் என்னை பார்த்து ஆபாசமான வார்த்தையால் பேசியும், 7 பேரும் சேர்ந்து கைகளால் அடித்தும் கால்களால் எட்டை உதைத்தார்கள் என்றும், அதில் மணிக்குமார், பூபாலகிருஷ்ணன், மணிகண்டன், மதன் குமார், பார்த்திப ராஜ் ஆகிய 5 பேரும் சேர்ந்து ஐயப்பன் மற்றும் கிருஷ்ணவேணி என்பவர்களை கற்களாலும், குச்சியாலும் மாறி, மாறி அடித்து கிருஷ்ணவேணிக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் அந்த சம்பவத்தின் தொடர்ச்சியாக 7 பேரும் சேர்ந்து தங்கராஜ் மற்றும் ராசு (எ) ஞானசெல்வத்தை கீழே தள்ளிவிட்டு கற்களால் அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், எதிரி கார்த்திக் என்பவர் மண் வெட்டியால் என் தலையில் பின் பக்கத்திலும், இடது கண் புருவத்திலும் வெட்டினார்கள் என்றும் சம்பவ இடத்தில் இருந்த சாட்சி கௌசல்யா என்பவரை எதிர் தமிழ்ச்செல்வன் அரிவாளால் வெட்டி இடது கை நடுவிரல் மற்றும் மோதிர விரலில் காயத்தை ஏற்படுத்தினார் என்றும், மேலும் எதிரி தமிழ்ச்செல்வன் என்பவர் அரிவாளை காட்டியும் கார்த்திக் மண்வெட்டியை காட்டியும் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை விடுத்தார் என்றும் சம்பவத்தின் போது சாட்சி தங்கராஜ் என்பவருக்கு சொந்தமான Bajaj CT 100 பைக்கை எதிரி கார்த்திக் மண் வெட்டியால் அடித்து சேதப்படுத்தினார் என்றும், மேலும் சாட்சி கௌசல்யாவை பெண் என்றும் பாராமல் எதிரி தமிழ்ச்செல்வன் கையை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார் என்றும் கூறியுள்ளேன் என்றால் ?

பதில் – சரியல்ல

கேள்வி – தற்போது எதிரிகள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில் – சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.08.29 09:09:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்